## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 174/2022

வாதி தரப்பு சாட்சி – 1 முத்துலெட்சுமி திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 17.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**3 முதல் 6 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. 2ம் பிரதிவாதி முனியப்பன் எனது தம்பி ஆவார். 1ம் பிரதிவாதி எனது தந்தை ஆவார். 3 முதல் 6ம் பிரதிவாதிகள் எனது குடும்பத்தை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகளை எதற்காக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் தாவா சொத்தை அவர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள். எனவே அவர்களுக்கு எதிராகவும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சங்கபிள்ளை மற்றும் துரைசாமி எனது பெரியப்பா என்றால் சரிதான். சங்கபிள்ளைக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள் 1 மகள் உள்ளனர்.

2. தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பாயி மூக்காயிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்து மூக்காயிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மூக்காயி எப்போது இறந்தார் என்றால் சுமார் 40 வருடங்கள் இருக்கும். வா.சா.ஆ–7 ஆவணத்தின் படி மூக்காயிக்கு பாத்தியப்பட்டதாக எவ்வளவு சொத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மூக்காயி வாங்க சொத்துக்கள் முழுவதுமாக குடும்பத்தில் உள்ளதா அல்லது விலைக்கு விற்று விற்றார்களா என்றால் குடும்பத்தில் உள்ளது.

3. 3முதல் 6 பிரதிவாதிகளுக்கு யார் கிரையம் கொடுத்தது என்றால் எனது தந்தை தான் கியைம் கொடுத்தார். எனது தந்தைக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரியல்ல. எத்தனை நாட்களுக்கு முன்னர் எனக்கும் எனது தந்தைக்கும் கருத்து வேறுபாடு உள்ளது என்றால் நான் எனது பெற்றோர் விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டதிலிருந்து அவர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 17 வருடங்கள் இருக்கும். எனது திருமணத்திற்கு பின்பு எனது பெற்றோருடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான்.

4. எனது திருமணத்திற்கு பிறகு எனது தந்தை சொத்துக்கள் பொறுத்து

என்ன செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்து உள்ளது என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எதுவும் எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து அவரின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி மூக்காயிக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது தந்தை மற்றும் அவருடன் உடன் பிறந்தவர்களும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மூக்காயி மூலம் எனது தந்தைக்கு கிடைத்த சொத்து எனது தந்தையின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

5. 22.11.2006ல் எனது தந்தை அவருக்காகவும், 2ம் பிரதிவாதிக்கு காப்பாளர் என்ற முறையில் மருதபிள்ளை மகன் சுப்பிரமணியுடன் சேர்ந்து 3 முதல் 6 வரையான பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் 70 சென்ட் நிலத்தை கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் சர்வே எண்.489/9ல் சுப்பிரமணிக்கு உள்ள உரிமை குறித்தும், எனது தந்தைக்கு புல எண்.495ல் உள்ள உரிமை குறித்தும், தனிப்பட பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரம் குறித்தும் குறிப்பிட்டு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு காப்பாளர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளதால் மட்டும் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாகிவிடாது என்றால் சரியல்ல.

6. 22.11.2006லிருந்து 3 முதல் 6 வரையான பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்னிட்டு இதுநாள் வரை அனுபவம் செய்து வருவதால் அவர்களுக்கு அனுபவம் பாத்தியம் சிந்தித்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் பற்றி அப்போதே தெரியும் என்றும், தற்போது எனது தந்தை மற்றும் எனது தம்பியின் தூண்டுதலின் அடிப்படையில் 3 முதல் 6 வரையான பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2006ல் ஏற்படுத்தப்பட்ட கிரையத்தை பொறுத்து 2022ம் வருடம் வழக்கு தாக்கல் செய்துள்ளது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. நான் கோரியுள்ள படி தாவா சொத்தில் பாகப்பிரிவினை கோர எனக்கு உரிமை இல்லை என்றும், எனவே இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது தந்தையும், எனது தம்பியும் இவ்வழக்கை எதிர் கொண்டு ஏன் நடத்தவில்லை என்றால் எனது உரிமை குறித்து மட்டுமே

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை மற்றும் தம்பி இவ்வழக்கை எதிர் கொண்டு நடத்தாததால் இவ்வழக்கிற்கு எனக்கு அவர்களும் உடந்தையாக உள்ளார்கள் என்பது தெரிகிறது என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த பின்னிட்டு 5ம் பிரதிவாதி பெயரை தவறாக குறிப்பிட்ட காரணத்தால் தான் அவருக்கு அறிவிப்பு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**